

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.01.2026) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, ஏழுகிணறு, அரசு ஸ்டான்லி மருத்துவமனை அருகில், 147 கோடி ரூபாய் செலவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 776 அடுக்குமாடி குடியிருப்புகளைக் கொண்ட ”முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்” திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.01.2026) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, ஏழுகிணறு, அரசு ஸ்டான்லி மருத்துவமனை அருகில், 147 கோடி ரூபாய் செலவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 776 அடுக்குமாடி குடியிருப்புகளைக் கொண்ட ”முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்” திறந்து வைத்து, ஒதுக்கீட்டு ஆணைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மற்றும் அமைச்சர்கள், மேயர், சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயரலுவலர்கள் உள்ளனர்.

## வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில்

# ஏழு கிணறு பகுதியில் ரூ.147 கோடி செலவில் 776 அடுக்குமாடி குடியிருப்புகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜன. 22 - வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, ஏழு கிணறு பகுதியில் ரூ.147 கோடி செலவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 776 அடுக்குமாடி குடியி ருப்புகள் கொண்ட“முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்” திறந்து வைத்து, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் ரூ.26 கோடி மதிப்பீட்டில் 144 புதிய அடுக்குமாடி குடியிருப்பு கள் கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.01.2026) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, ஏழுகிணறு, அரசு ஸ்டான்லி மருத்துவமனை அருகில், 147 கோடி ரூபாய் செலவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 776 அடுக்குமாடி குடியிருப்பு களைக் கொண்ட“முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்” திறந்து வைத்து, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 144 புதிய அடுக்குமாடி குடியிருப்பு களுக்கான கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உன்னத திட்டமான வடசென்னை வளர்ச்சி திட்டம், வடசென்னை பகுதியின் சமர்ச்சீர் வளர்ச்சியை நோக்கமாக கொண்டு சுகாதாரம், கல்வி, நகர உட்கட்டமைப்பு, பாதுகாப்பான குடிநீர், கழிவுநீர் வசதி, மின்சாரம், வாழ்விடம் போன்ற வசதிகளை ஏற்படுத்தி தருகிறது.

### “முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்” திறப்பு

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் ஒரு பகுதியாக மண்ணடி, முத்தியால் பேட்டை, ஏழுகிணறு, பிராட்வே பிர காசம் சாலை, வால்டாக்ஸ் சாலை, ஜட்காபுரம், கல்யாணபுரம், வுட்வொர்ஃப் போன்ற இடங்களில் நீண்ட காலமாக சாலை ஓரங்களிலும், கால்வாய் ஓரங்களிலும் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் வகையில் **முதலமைச்சர் அவர்களால் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ்** கடந்த 4.12.2024 அன்று சென்னை, வால்டாக்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 776 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, சென்னை, ஏழுகிணறு, பழைய சிறைச்சாலை சாலையில் அரசு ஸ்டான்லி மருத்துவமனை அருகில், 776 அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்திடும் வகையில் முதலமைச்சர் அவர்கள் கடந்த 31.01.2025 அன்று களஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

அதன்படி, குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு, வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் **147 கோடி ரூபாய்** செலவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் தரைதளம் மற்றும் 9 தளங்களுடன் இரண்டு தொகுதிகளாக **3,26,609 சதுர அடி** கட்டடப் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள 776 அடுக்குமாடி குடியிருப்புகளை கொண்ட **“முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்”** முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

பின்னர், அங்கன்வாடி மையம், நகர்ப்புற நலவாழ்வு மையம், நியாய விலைக் கடைகள், முதல்வர் படைப்பகம், நவீன நூலகம், உடற்பயிற்சிக்கூடம், திறந்தவெளி அரங்கம், குழந்தைகள் விளையாட்டுப் பகுதி ஆகியவற்றை பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள், முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளையும், நலத்திட்ட உதவிகளையும் பயனாளிகளுக்கு வழங்கினார். ஒதுக்கீட்டு ஆணைகளை பெற்றுக்கொண்ட பயனாளிகள் முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

**“முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகளில்”** உள்ள ஒவ்வொரு குடியிருப்பும் **415 சதுர அடி** பரப்பளவில் சமையலறை, கூடம் (Hall), படுக்கைஅறை, கழிப்பறை மற்றும் குளியலறை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளதோடு மாற்றுத்திறனாளிகளுக்கென 40 குடியிருப்புகளும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**“முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்”** வளாகத்திலுள்ள உட்கட்டமைப்பு வசதி கட்டடத்தில் **“அங்கன்வாடி மையம்”**, நகர்ப்புற நல வாழ்வு மையம், **“நியாய விலைக் கடைகள்”**, **“முதல்வர் படைப்பகம்”**, **“நவீன நூலகம்”**, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பிரத்தியேக **“உடற்பயிற்சிக் கூடம்”** அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், இவ்வளாகத்தில் மாணவச் செல்வங்களை நெறிப்படுத்தும் வகையில் **“திறந்தவெளி அரங்கம்”**, **“குழந்தைகள் விளையாட்டுப் பகுதி”**, பூங்காக்கள், 8 எண்ணிக்கையிலான மின்தூக்கி வசதிகள், கண்காணிப்பு கேமராக்கள், சீரான மின்சாரம் வழங்கிடும் வகையில் இரண்டு எண்ணிக்கையிலான 500 KVA திறன் கொண்ட மின்மாற்றிகள், 6 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர் தேக்கத் தொட்டிகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், தீயணைப்பு குழாய் தொட்டிகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் என பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர்தொட்டி தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் “ஒருங்கிணைந்த வளாகத்தில்” 700 அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளன. இதன் அருகில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைதளம் மற்றும் 9 தளங்களுடன் கூடுதலாக 144 புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகளை முதலமைச்சர் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தின் தலைவர் ப. ரங்கநாதன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி. வினய், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மேலாண்மை இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி சிங், பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் வீரவணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. பார்வையிட்டார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர்.க. செல்வம் சட்டமன்ற உறுப்பினர் சி வி எம் பி. எழிலரசன் மாநகர செயலாளர்.சி கே வி. தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பிப். 2, 3 தேதிகளில்

# மாமல்லபுரத்தில் உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேட்டி!

*சென்னை, ஜன. 22 - முதலமைச்சர் அவர்கள் தலைமையில் உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு பிப்ரவரி 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் பகுதியில் சிறப்பாக நடைபெற உள்ளது என்று சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.*

அவரது பேட்டி வருமாறு:

தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறையை உலகளவில் முன்னணி முதலீட்டு இலக்காக மாற்றும் நோக்கில், முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சுற்றுலா கொள்கை 2023 அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது. இந்தக் கொள்கை, குறிப்பாக சுற்றுலாத் துறையில் பொது-தனியார் கூட்டாண்மை Public Private Partnership முறையிலான திட்டங்களை செயல்படுத்துவதற்கான வலுவான வழிகாட்டுதல்களையும் ஊக்கங்களையும் வழங்குகிறது.

அதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு 2025-2026 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையில் (Budget Speech), சுற்றுலாத் துறையில் PPP முதலீட்டு திட்டங்களுக்கு கூடுதல் ஊக்கம் வழங்கப்படும் என்றும், தனியார் முதலீடு களை ஈர்க்க சிறப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. மேலும் சுற்றுலாத் துறையும் ஒரு தொழில் துறைதான் என முதலமைச்சர் அறிவித்தார்கள்.

இந்த இலக்கை நடைமுறைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு சுற்றுலாத் துறை



2026, மாநிலத்தின் சுற்றுலா முதலீட்டு வாய்ப்புகளை தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் “தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு 2026ல் நடத்த திட்ட மிட்டுள்ளது.

அதன் அடுத்தகட்டமாக, தமிழ்நாட்டின் சுற்றுலாத் துறையில் பெரிய அளவிலான தனியார் முதலீடு களை ஈர்க்க, PPP திட்டங்களுக்கான புரிந்துணர்வு, கூட்டாண்மை மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்களை உருவாக்க, “தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு மாநாடு 2026” பிப்ரவரி 02 மற்றும் 03, 2026 ஆகிய தேதிகளில் மாமல்லபுரம் (Mamallapuram), செங்கல்பட்டு மாவட்டத்தில் பிரம்மாண்டமாக நடத்தப்பட உள்ளது.

**மாநாட்டின் முக்கிய நோக்கங்கள்**

- சுற்றுலா வணிகத்தில் PPP முதலீட்டு திட்டங் களை ஊக்குவித்தல்
- இந்தியாவின் சிறந்த சுற்றுலா முதலீட்டு தலமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்துதல்
- புதுமையான சுற்றுலா உள்கட்டமைப்பு திட்டங்களை உருவாக்குதல்
- சுற்றுலா இயக்குநர்கள், முதலீட்டாளர்கள், தொழில் துறை பங்குதாரர்களை அரசுடன் ஒரே தளத்தில் இணைத்தல்
- பார்வையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்த புதிய சுற்றுலா தயாரிப்புகளை உருவாக்க தனியார் துறையை ஊக்குவித்தல்

கவனம் செலுத்தப்படும் முக்கிய துறைகள்:

- சுற்றுச்சூழல் (Eco) சுற்றுலா மையங்கள்
- கடலோர & கப்பல் சுற்றுலா உள்கட்டமைப்பு
- தீம் & சாகச பூங்காக்கள்
- நல்வாழ்வு சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா பாதைகள்
- MICE (Meetings, Incentives, Conferences, Exhibitions) சுற்றுலா
- புதுமையான சுற்றுலா தயாரிப்புகள் மற்றும் தனித்துவ அனுபவங்கள்

பங்குதாரர்களுக்கான சிறப்பு அம்சங்கள்:

- B2B முதலீட்டாளர் சந்திப்புகள்
- கொள்கை விளக்க அமர்வுகள்
- தொழில்துறை தலைவர்களுடன் நேரடி விவாதங்கள்
- கூட்டு முதலீட்டு ஒப்பந்தங்களை விரைவு படுத்தும் வசதி மையங்கள் எதிர்பார்க்கப்படும் பயன்கள்:
- சுற்றுலா துறையில் சர்வதேச தரத்திலான உள்கட்டமைப்பு
- புதிய முதலீட்டு வாய்ப்புகள் உருவாக்கம்
- சுற்றுலா வளர்ச்சியில் வலுவான PPP கூட்டாண்மைகள்
- தமிழ்நாடு சுற்றுலா பிராண்டுக்கு மேம்பட்ட உலகளாவிய பார்வை
- வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்களிப்பு

தமிழ்நாடு சுற்றுலா துறை, மாநிலத்தின் சுற்றுலா வளங்கள், பண்பாட்டு பெருமை மற்றும் முதலீட்டு சாத்தியங்களை உலகிற்கு வெளிப்படுத்தும் இந்த மாநாட்டில் முதலீட்டாளர்கள், சுற்றுலா நிறுவனங்கள், தொழில்துறை பங்குதாரர்கள் அனைவரும் பங்கு பெற உள்ளனர்.

மேலும் சிப்காட் வாயிலாக சுற்றுலா வளர்ச்சிக்கு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி ராஜா அவர்கள், பல்வேறு மாவட்டங்களில் இடங்களை அடையாளம் கண்டு சுற்றுலாத்துறைக்கு வழங்க முயற்சி எடுத்துள்ளார்.

இவ்வாறு அமைச்சர் இரா. இராஜேந்திரன் செய்தியாளர்களிடையே தெரிவித்தார்.


